# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/35—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/35 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, திசெம்பர் 17, 1976.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (தாய்நாடு திரும்பும் இந்தியருக்குப் பணிக்கொடைகளும், வேறு பண வகையிலான நன்மைகளும் கொடுத்தல் பற்றிய) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இவ்வொழுங்குவிதிகளால் அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் தத்துவம், பணி அல்லது கடமை எதனையும் அத்தகைய அதிகாரி தொழிற்றிணைக்களத்தின் அலுவலர் எவருக்கும் கையளிக்கலாம்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை, எழுத்திலுள்ள வேறேதேனும் சட்டத்தில் அல்லது தொழிலுக்கமர்த்துதல் தொடர்பிலான வாய்மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒப்பந்தத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், வலுவும் பயனுமுடையனவாதல் வேண்டும் ; அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் அல்லது ஒப்பந்தத்துக்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் நேருமிடத்து, அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தம் எதனையும்விட இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. (1) தாய்நாடு திரும்பும் இந்தியரொருவரை ஏதேனும் தோட்டத்தில், ஐந்தாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்துக்குத் தொழிலாளரொருவராகத் தொழிலுக்கமர்த்தியுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், தொழிலாளராக அவர் புரிந்த சேவைகள் தொடர்பாக இதனோடுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதங்களுக்கிணங்கக் கணிக்கப்பட்ட பணிக்கொடையொன்றை அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) தாய்நாடு திரும்பும் இந்தியரொருவரை ஏதேனும் தோட்டத்தில், ஐந்தாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்துக்கு பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராகத் தொழிலுக்கமர்த்தியுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு பணியாட்டொகுதியின் உறுப்பினராக அவர் புரிந்த சேவைகள் தொடர்பாக இதனோடுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதங்களுக்கிணங்கக் கணிக்கப்பட்ட பணிக்கொடையொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வரும் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய தொழில்தருநரால் அத்தகைய சேவைகள் தொடர்பாக பணிக்கொடையொன்று வழங்கப்பட்டுள்ள தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்கு அல்லது அவர் தொடர்பாக ஏற்புடையனவாதல் ஆகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்குப் போகுமதியாகவுள்ள ஏதேனும் பணிக்கொடைக் கொடுப்பனவானது, அத்தகைய கொடுப்பனவைப் பெறுவதற்குமுன்னர் அத்தகைய தாய்நாடு திரும்புபவர் இறக்குமிடத்து, அத்தகைய தாய்நாடு திரும்புபவர் ஊழியர் சகாய நிதிய உறுப்பினரொருவராக இருந்திருப்பாராயின், ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையை அப்பிரிவின்கீழ்ப் பெறுவதற்கு எவ்வாள் உரித்துடையவராக விருந்திருப்பாரோ அல்லது எவ்வாட்கள் உரித்துடையவர்களாக இருந்திருப்பார்களோ, அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

5. (1) ஏதேனும் தோட்டத்தில் தொழிலாளரொருவராக அல்லது பணியாட்டொகுதியின் உறுப்பினராகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தாய்நாடு திரும்பும் இந்தியரொருவர், அல்லது அவரது சார்பாக, அவர் எத்தொழிற் சங்கத்தில் உறுப்பினராகவுள்ளாரோ அத்தொழிற்சங்கம், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31 ஆ (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் பணிக்கொடையின் அல்லது வேறு நன்மைகளின் கொடுப்பனவு தொடர்பான நிவாரணத்துக்கான அல்லது பரிகாரத்துக்கான விண்ணப்பமொன்று செய்வதற்கு உரித்துடையவராதல் அல்லது உரித்துடையதாதல் ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வரும் நாளன்று அல்லது அதற்கு முன்னர், ஏதேனும் தோட்டத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளரான அல்லது பணியாட்டொகுதியின் உறுப்பினரான தாய்நாடு திரும்பும் இந்தியரொருவரால், அல்லது அவரது சார்பாக, அவர் எத்தொழிற்சங்கத்தில் உறுப்பினராகவுள்ளாரோ அத்தொழிற்சங்கத்தினால், பணிக்கொடையின் அல்லது வேறு நன்மைகளின் கொடுப்பனவு தொடர்பாக, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஆ (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் தொழில் நியாயசபையொன்றுக்குச் செய்யப்படும் விண்ணப்பமொவ்வொன்றும் அவ்விண்ணப்பத்தின்மீது தீர்மானமொன்று செய்யப்படுவதன் முன்னர் எந்நேரத்திலும் அவ்வாறு தாய்நாடு திரும்புபவரால் அல்லது அவர் எத்தொழிற் சங்கத்தின் உறுப்பினராகவுள்ளாரோ அத்தொழிற்சங்கத்தினால் பிரேரணை மூலம் திரும்பப்பெறப்படலாமென்பதுடன், அத்தகைய நியாயசபையானது அத்தகைய பிரேரணையை அனுமதித்துக் கட்டளையிடுதலும் வேண்டும்.

(3) விண்ணப்பமொன்றை திரும்பப்பெறுவதற்கான பிரேரணையை அனுமதித்துக் கட்டளையொன்று இரண்டாம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்டுள்ளவிடத்து, பணிக்கொடையின் அல்லது வேறு பணவகையிலான நன்மைகளின் கொடுப்பனவு தொடர்பான இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், அத்தகைய விண்ணப்பம் தாய்நாடு திரும்பும் எவ்விந்தியர் தொடர்பாகத் தொழில் நியாயசபைக்குச் செய்யப்பட்டுள்ளதோ தாய்நாடு திரும்பும் அவ்விந்தியருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, தொழில்தருநர், சொல்லப்பட்ட கட்டளையிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் பற்றி அறிவித்தலும் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதி ஏற்புடையதாகும், தாய்நாடு திரும்பும் இந்தியரொருவரின் தொழில்தருநர் ஒவ்வொருவரும்—

(அ) ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குச் சேரவேண்டிய நன்மைகளின் கொடுப்பனவுக்காக அச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழான கோரிக்கையொன்றை அத்தகைய தொழில்தருநர் உறுதிப்படுத்தும் தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் அல்லது இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவர் அத்தகைய கோரிக்கை செய்துள்ளவிடத்து அல்லது அத்தகைய நன்மைகளைப் பெற்றுள்ளவிடத்து, இவ்வொழுங்கு விதிகள் வலுவுக்கு வரும் தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள், அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குச் சேரவேண்டிய பணிக்கொடையினதும் வேறு பணவகையிலான நன்மைகளினதும் தொகைகளை அவருக்கு அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு தாய்நாடு திரும்புபவர் அவரது சொத்துக்களை அல்லது அவரது குடும்பத்தினரது சொத்துக்களை இடமாற்றுவதற்கான செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதிப்பத்திரமொன்றைக் காண்பிக்கும் தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு வழங்குதல் வேண்டும்.

7. (1) "முற்பணக் கணக்கு நிதியம்" என்றறியப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கு—

(அ) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, திரட்டு நிதியத்திலிருந்து, இந்நிதியத்திற்குச் செலுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எவையேனும் பணத்தொகைகளையும் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் தேயிலைக் கட்டுப்பாட்டாளரிடமிருந்தும், இறப்பர்க் கட்டுப்பாட்டாளரிடமிருந்தும் ஆணையாளரால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எவையேனும் பணத்தொகைகளையும்,

செலுத்துதல் வேண்டும்.

(2) ஆணையாளரே முற்பணக் கணக்கு நிதியத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பானவராதல் வேண்டும்.

8. (1) பணிக்கொடையின் அல்லது வேறு பணவகையிலான நன்மைகளின் கொடுப்பனவுக்காக தாய்நாடு திரும்பும் இந்தியரொருவரால் அல்லது அவர் சார்பாகத் தொழிற்சங்கமொன்றினால் விண்ணப்பமொன்று செய்யப்படுவதன் மேல், ஆணையாளர், அவர் அவசியமானதெனக் கருதும், அத்தகைய விசாரணையின் பின்னர், எவரேனும் தொழில்தருநர் இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்குச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் பற்றி அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு அறிவிக்கத் தவறியுள்ளார் அல்லது அறிவிக்க மறுத்துள்ளார், அல்லது பிழையான தொகையொன்றை அறிவித்துள்ளார் எனத் திருப்தியுறுமிடத்து, அத்தகைய தொழில்தருநரிடமிருந்து அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் குறித்துக்காட்டும் சான்றிதழொன்றை ஆணையாளர் வழங்குதல் வேண்டும். அத்தகைய சான்றிதழின் பிரதியொன்று அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கும் அவரது தொழில்தருநருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் ஓராம் பந்தியின் கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் சரிபிழையானது, முற்றும் முடிவானதுமாதல் வேண்டுமென்பதுடன், நியாயசபை அல்லது நீதிமன்றமெதனிலும் எழுத்தாணை மூலமாகவோ வேறு விதமாகவோ கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அல்லது இவற்றினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, எவரேனும் தாய்நாடு திரும்பும் இந்தியருக்குச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் தொழில்தருநரொருவர் கொடுக்கத் தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து, ஆணையாளர், அத்தகைய பணிக்கொடையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் முற்பணக் கணக்கு நிதியத்திலிருந்து அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குக் கொடுப்பனவு செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கொடுப்பனவு பற்றி அவ்வாறு தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநருக்கும், விடயத்திற்கேற்ப, தேயிலைக் கட்டுப்பாட்டாளருக்கும் அல்லது இறப்பர்க் கட்டுப்பாட்டாளருக்கும் அறிவித்தலும் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் கீழ் ஆணையாளர் முற்பணக் கணக்கு நிதியத்திலிருந்து எவரேனும் தாய்நாடு திரும்பும் இந்தியருக்கு ஏதேனும் கொடுப்பனவு செய்யுமிடத்து, அவ்வாறு தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநர், ஆணையாளரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு அத்தகைய கொடுப்பனவின் மீதான மிகைக்கட்டணமாக, அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு ஆணையாளரால் அவ்விதம் கொடுக்கப்படும் தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாதவொரு பணத்தொகையை ஆணையாளருக்குக் கொடுத்தற்காளாதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் கீழ் ஆணையாளர், எவரேனும் தாய்நாடு திரும்பும் இந்தியருக்கு ஏதேனும் கொடுப்பனவு செய்யுமிடத்து, அவர் அத்தகைய கொடுப்பனவு பற்றியும் அதன் மீது அவ்வாறு தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநரால் கொடுக்கற்பாலதான மிகைக் கட்டணத்தொகை பற்றியும் அத்தகைய தொழில்தருநருக்கும், விடயத்திற்கேற்ப, தேயிலைக் கட்டுப்பாட்டாளருக்கும் அல்லது இறப்பர்க் கட்டுப்பாட்டாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின் (5) ஆம் பந்தியின் கீழான அறிவிப்பொன்று ஆணையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப, தேயிலைக் கட்டுப்பாட்டாளர் அல்லது இறப்பர்க் கட்டுப்பாட்டாளர், தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்கு வழங்கப்படும் பணிக்கொடைக் கொடுப்பனவாகவும் அதன்மீது கொடுக்கற்பாலதான மிகைக் கட்டணமாகவும் அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகைகளை, விடயத்திற்கேற்ப, தேயிலை மானிய நிதியத்தின் கீழ் அல்லது இறப்பர் மீள்நடுகை மானிய நிதியத்தின் கீழ் அவ்வாறு தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநருக்குக் கொடுக்கற்பாலதான ஏதேனும் பணத்திலிருந்து, ஆணையாளருக்குக் கொடுப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

9. (1) தாய்நாடு திரும்பும் இந்தியரொருவர் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தோட்டமொன்று காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது காணி கொள்ளுதற் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, ஆணையாளர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னர், அத்தகைய உரித்தாக்கல் அல்லது கொள்ளல் நடைபெற்ற தேதிக்கு முன்னர் அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்கு அவரது தொழில்தருநரிடமிருந்து, அத்தகைய தொழில்தருநரின் கீழான அவரது சேவைகள் தொடர்பாகச் சேரவேண்டிய பணிக்கொடைத் தொகையையும் வேறு பணவகையிலான நன்மைகளையும் குறித்துக்காட்டும் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் ஓராம் பந்தியின் கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் சரிபிழையானது முற்றும் முடிவானதுமாதலும் வேண்டும். அத்துடன் ஏதேனும் நீதிமன்றத்தில் எழுத்தாணை வகையாகவோ வேறுவகையாகவோ கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்கு அவரது தொழில்தருநரிடமிருந்து சேரவேண்டிய பணத்தொகையைக் குறித்துக்காட்டும் இவ்வொழுங்கு விதியின் ஓராம் பந்தியின் கீழான சான்றிதழொன்றை ஆணையாளர் வழங்குமிடத்து, விடயத்திற்கேற்ப, காணிச்சீர்திருத்த ஆணைக்குழு அல்லது கொள்ளும் அலுவலர், அவ்வாறு தாய்நாடு திரும்புபவர் அவரது சொத்துக்களை அல்லது அவரது குடும்பத்தினரினது சொத்துக்களை இடமாற்றுவதற்கான செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து பெறப்படும் அனுமதிப்பத்திரமொன்றைக் காண்பித்ததன் பின்னர், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை, ஆணையாளர் மூலமாக அவ்வாறு தாய்நாடு திரும்புபவருக்குக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் பிரதியொன்று, அத்தகைய சான்றிதழ் எத் தாய்நாடு திரும்புபவர் தொடர்பாக வழங்கப்படுகின்றதோ அத்தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநருக்கு ஆணையாளரால் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்குக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் அல்லது கொள்ளும் அலுவலரினால் கொடுக்கப்படும் ஏதேனும் பணத்தொகையானது, விடயத்திற்கேற்ப, காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் அல்லது காணி கொள்ளுதற் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் அவ்வாறு தாய்நாடு திரும்புபவரின் தொழில்தருநருக்குக் கொடுக்கற்பாலதான நட்டஈட்டின் மீதான முதற்பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகை அத்தகைய தொழில்தருநருக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும்.

10. தகுதிவாய்ந்த அதிகாரி—

(அ) தாய்நாடு திரும்பும் இந்தியர்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் தோட்டத்தை, அவர்கள் தொடர்பான ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைப் பரிசோதனை செய்யும் நோக்கத்துக்காக, அல்லது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக, பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசித்துப் பார்வையிடுவதற்கும் ;

(ஆ) அவர் அத்தகைய இடத்தைப் பார்வையிடும்பொழுது அத்தகைய ஏதேனும் பதிவேடு அல்லது இடாப்பு பரிசோதனைக்குக் கிடைக்கத் தக்கதாகவில்லாதவிடத்து, குறிப்பிட்ட பிந்திய தேதியொன்றில் அத்தகைய இடத்தில் அல்லது அத்தகைய அதிகாரியின் அலுவலகத்தில், பரிசோதனைக்காக அத்தகைய இடாப்பை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கும் ;

(இ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவரது தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, அவருக்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும்படி, தொழில்தருநரை வேண்டுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும் ;

(ஈ) இடாப்பொன்றின் அல்லது பதிவேடொன்றின் முழுமையினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினதும் பிரதிகளை எடுப்பதற்கும் ; அத்துடன்

(உ) இவ்வொழுங்குவிதிகளுக்குப் பயன் அளிக்கும் நோக்கத்துக்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதற்கும்

தத்துவமுடையவராதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"கொள்ளும் அலுவலர்" என்பது (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"ஆணையாளர்" என்பது அப்போதைக்குத் தொழில் ஆணையாளர் என்ற பதவியை வகிக்கும் ஆள் எனப் பொருளாவதுடன்—

(அ) 8 ஆம் 9 ஆம் ஒழுங்குவிதிகளைத் தவிர்ந்த, இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஆணையாளரின் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி தொடர்பாக, அத்தகைய தத்துவத்தைப் பிரயோகிக்கவும், அத்தகைய கடமையைப் புரியவும், அத்தகைய கடமைகளை ஆற்றவும் ஆணையாளரினால் எழுத்தில் அதிகாரம் பெற்ற எவரேனும் ஆளையும்,

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் 9 ஆம் ஒழுங்குவிதிகளினால் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவம் தொடர்பாக அப்போதைக்குப் பிரதித் தொழில் ஆணையாளர் அல்லது சிரேட்ட உதவித் தொழில் ஆணையாளர் அல்லது உதவித் தொழில் ஆணையாளர் என்ற பதவியை வகிக்கும் எவரேனும் ஆளையும் அல்லது எவரேனும் தொழில் அலுவலரையும் உள்ளடக்கும் ;

"ஊழியர் சகாய நிதியம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதியச் சட்டத்தில் உள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"ஊழியர் சகாய நிதியச் சட்டம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதியச் சட்டம் எனப் பொருளாகும் ;

"தொழில்தருநர்" என்பது—

(அ) எவரேனும் தொழிலாளரைத் தொழிலுக்கமர்த்தும் எவரேனும் ஆள் என, அல்லது அவர் சார்பாக, எவரேனும் தொழிலாளரைத் தொழிலுக்கமர்த்தும் வேறு எவரேனும் ஆள் என ; அல்லது

(ஆ) வேறு எவரேனும் ஆள் சார்பாக எவரேனும் தொழிலாளரைத் தொழிலுக்கமர்த்தும் எவரேனும் ஆள் எனப் பொருளாவதுடன், தொழில்தருநர்கள் குழுவொன்றையும் (அத்தகைய குழு, குழுமமாக அல்லது கம்பனியாக அல்லது கூட்டுத்தாபனமாக அல்லது தொழிற்சங்கமாகவிருப்பினும்சரி) தொழில்தருநராக இல்லாதொழிந்துள்ள எவரேனும் ஆளையும் அல்லது தொழில்தருநர்கள் குழுவொன்றையும் உள்ளடக்கும் ;

"தோட்டம்" என்பது (133 ஆம் அத்தியாயமான) தோட்டத்தொழிலாளர் (இந்தியர்) கட்டளைச்சட்டத்தில் உள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"தாய்நாடு திரும்பும் இந்தியர்" என்பது 1964 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை உடன்படிக்கையின்கீழ் இந்திய அரசாங்கத்தினால் இந்தியப் பிரசையொருவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ;

"கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்" என்பது (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் எனப் பொருளாகும் ;

"தொழிலாளர்" என்பது தோட்ட இடாப்பொன்றில் அவரது பெயர் பதியப்பட்டுள்ள (சாதாரணமாக இந்தியக் கூலிகள் எனறறியப்படும்) எவரேனும் தொழிலாளர் எனவும் கங்காணி எனவும் பொருளாவதுடன், சாதாரணமாக "துலிக்கர்கள்" என்றறியப்படும் முஸ்லீம்களையும் தொழிலாளரொருவராக இல்லாதொழிந்துள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"காணி கொள்ளுதற் சட்டம்" என்பது (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டம் எனப் பொருளாகும் ;

"காணிச் சீர்திருத்தச் சட்டம்" என்பது 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம் எனப் பொருளாகும் ;

"காணிச்சீர்திருத்த ஆணைக்குழு" என்பது காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் உள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"பணியாட்டொகுதியின் உறுப்பினர்" என்பது தோட்டமொன்றில் தொழிலாளரொருவராகவல்லாத வேறு ஏதேனும் முறையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் ஆளெனப் பொருளாகும் என்பதுடன், பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்த எவரேனும் ஆளை உள்ளடக்கும் ;

"வேறு பணவகையிலான நன்மைகள்" என்பது கூலி நிலுவைகளையும், சகாய நிதிய உதவுதொகைகளையும், ஆண்டு விடுமுறை நாட் கூலிகளையும் உள்ளடக்கும் ;

"இறப்பர் மீள்நடுகை மானிய நிதியம்" என்பது (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய நிதியம் எனப் பொருளாகும் ; அத்துடன்

"தேயிலை மானிய நிதியம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தேயிலை மானியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேயிலை மானிய நிதியம் எனப் பொருளாகும்.

## அட்டவணை

இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தாய்நாடு திரும்பும் இந்தியரொருவருக்கு கொடுபடற்பாலதான பணிக்கொடை பின்வரும் வீதங்களில் கணிக்கப்படுதல் வேண்டும் :

**(1) தொழிலாளர்களுக்கு ஏற்புடைத்தாகும் வீதங்கள்**

(அ) ஊழியர் சகாய நிதியத்திற்கு உதவுதொகைகள் செலுத்துவதற்கான பொறுப்பு தொடங்குமுன்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வோர் ஆண்டுக்கும்—

(i) ஆணொருவருக்கு .. ரூபா 35.00
(ii) பெண்ணொருவருக்கு .. ரூபா 30.00

(ஆ) ஊழியர் சகாய நிதியத்திற்கு உதவுதொகைகள் செலுத்துவதற்கான பொறுப்பு தொடங்கிய தேதியிலிருந்து 1970 திசெம்பர் 31 ஆந் தேதிவரை தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வோர் ஆண்டுக்கும்—

(i) ஆணொருவருக்கு .. ரூபா 17.50
(ii) பெண்ணொருவருக்கு .. ரூபா 15.00

**(2) பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தாகும் வீதங்கள்**

தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த ஒவ்வோர் ஆண்டிற்கும் இறுதி வேதனத்தின் அடிப்படையிலான ஒரு மாதத்தின் மொத்த வேதனம். ஏதேனும் சகாய நிதியத்துக்கான தொழில்தருநரின் உதவுதொகைகள் குறைத்து.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.